**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 413 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 1** |
| **Name** | : | திருமதி. பேச்சியம்மாள் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.11.2023**

<u>எதிரி ஆஜர்.</u>

## முதல் விசாரணை :

நான் போடி தாலுகா, மீனாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். எனது தங்கச்சி உமாராணி குன்னத்துப்பட்டியில் வசித்து வருகிறார். சம்பவத்திற்கு 4 வருடங்களுக்கு முன்பிருந்து வந்துபோயிருக்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். நான் படிக்காதவர். தேதி, மாதம் தெரியவில்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு, மதியம் 02.00 மணிக்கு நான் என் தங்கையின் தோட்டத்து வீட்டில் இருந்தேன். என் சின்னம்மா பார்வதி, என் தங்கை உமாராணி, பூங்கொடி ஆகியோரும் அங்கு இருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அங்கு வந்து, தேவடியாளுங்களா, ரவுடிங்களா, உங்களுக்கு இங்க என்ன சோலி என்று சொன்னார். நான் என் தங்கை வீட்டிற்கு வந்ததாகச் சொன்னேன். அதற்கு எதிரி, உனக்கு

என்ன சோலி இங்க என்றும் போங்கலா என்றும் சொன்னார். வெட்டுவேன் குத்துவேன் என்று சொன்னார். சாப்பாடு ஆக்கும் விறகடுப்பை தள்ளி, சோத்து பாணையை உடைத்து, அரிசி எல்லாம் கொட்டி, தேவிடியாளுஙகளுக்கு இங்க என்னடீ சோலி, ரவுடிகளா என்று சொல்லி என்னை பிடித்து ஓங்கி அடிக்க வந்தார். அப்போது பார்வதியும், பூங்கொடியும் தடுத்துவிட்டார்கள் நான் கீழே விழுந்து மயக்கமாகிவிட்டேன். டிரம்மில் வைத்திருந்த தண்ணீரை எடுத்து எதிரி குடித்துவிட்டு வந்து பேசுவதும், மீண்டும் தண்ணீரை மூஞ்சியில் அடித்து கழுவி குடிப்பதுமாக எதிரி இருந்தார். ஏன் குடி தண்ணீரை உலப்புகிற என்று கேட்டதற்கு, நாளைக்கு இந்த தண்ணீர் கிடைக்காதுலா என்று சொன்னார். தண்ணீர் வரும் போர் தண்ணீர் குழாயில் இராத்திரி கல்லைப்போட்டு கெமிக்கலை போட்டுவிட்டு எங்களுக்குத் தண்ணீர் வரவிடாதபடி செய்துவிட்டார். நாங்கள் ஆடுமாடு வைத்துள்ளோம். ஆத்து குடி தண்ணீர் வராதபடி குழாயில் கல்லைப் போட்டு செய்துவிட்டார். இது சம்பந்தமாக உசிலம்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரினை யார் எழுதினார்கள் என்றால் நான் படிக்கவில்லை. யார் எழுதினார்கள் என்று தெரியவில்லை. புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் அதசாஆ.1 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>**

புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது. நான் படிக்கவில்லை. நாள், மாசம், கிழமை எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. போடிக்கும் குன்னத்துப்பட்டிக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தெரியாது. ஆனால் பஸ்சில் வந்தார் சுமார் 1 ½ மணி நேரத்தில் வந்துவிடலாம். நான் தற்போதும் போடியில் தான் வசித்து

வருகிறேன். சாட்சி பார்வதி எனது சின்னம்மா ஆவார். அவர் உமாராணியின் தாயார் என்றால் சரிதான். பூங்கொடி எனது சின்னம்மா மகள் ஆவார். என் கணவர் பெயர் மொக்கச்சாமி. என் கணவர் வழக்கிற்கு சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்து விட்டார். எதிரியின் தகப்பனார் பெயர் கருப்பத்தேவர். அவரது தம்பி பெயர் சந்தானம். கருப்பத்தேவரும் சந்தானமும் உடன் பிறந்த அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். சந்தானமும், உமாராணியும் திருப்பூரில் வசித்து தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். சந்தானம் தற்போது இறந்துவிட்டார். சந்தானம் உயிருடன் இருக்கும் போதுதான் என் தங்கை குடியிருக்கும் வீடு இதர சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரிதான். சந்தானம் உயிருடன் இருக்கும் வரை என் தங்கை இருக்கும் வீடு மற்றும் சொத்துக்களை பராமரித்து வந்தார் என்றால் எனக்குத் தெரியாது. உமாராணி என்பவர் கருப்பத்தேவர் மீதும், ஆஜர் எதிரி மீதும் ஒரு சிவில் வழக்கும் ஒரு கிரிமினல் வழக்கும் போட்டிருந்தார் என்றால் எனக்குத் தெரியாது. சம்பவ இடத்திற்கும் போலிஸ் ஸ்டேசனுக்கும் இடையே சுமார் 5 கிமீ தூரம் இருக்கும். சுமார் ½ மணி நேரத்தில் சென்றுவிடலாம். காவல்நிலையத்திற்கு சம்பவம் நடந்த சுமார் 1 மணி நேரத்தில் சென்று புகார் கொடுத்தேன். சம்பவ இடம் சம்பந்தமாக எதிரியும் உமாராணி மீது ஒரு சிவில் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். உமாராணியும் சம்பவம் நடந்தபோது அங்கு இருந்தார் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் எனது தங்கை உமாராணி என்னோடு இருந்ததாக சொல்லிவிட்டு தற்போது என் தங்கை சம்பவ இடத்தில் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வெட்டுவேன், குத்துவேன் என்று எதிரி சொன்னதை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். சாப்பாடு சமைத்தபோது, சோத்துப்பானையை உடைத்துவிட்டதாக போலிசார் விசாரணையில்

சொல்லவில்லை. கம்பி கொண்டுவந்தார் என்றும் அதைக் கொண்டு அடிக்க வந்தார் என்றும் அதை பூங்கொடியும் என் சித்தியும் தடுக்க வந்தார்கள் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. போலிசார் விசாரணையில் சொல்லாத சங்கதிகளை தற்போது நீதிமன்றத்தில் இவ்வழக்கிற்காக மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. டிரம்பில் இருந்த தண்ணீரில் முகத்தை கழுவிவிட்டு உலப்பிக்கொண்டிருந்தார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். தண்ணீர் வரும் போரை அடைத்துவிட்டார் என்றும் ஆடுமாடு வளர்த்து வருகிறோம் என்ற விபரத்தையும் போலிசார் விசாரணையில் சொன்னேன். போலிசார் என்னை எத்தனை முறை விசாரணை செய்தார்கள் என்றால் 4,5 முறை விசாரணை செய்தார்கள். சம்பவம் நடந்த மறுநாளும், 3 வதுநாள், 4 வது நாளும் போலிசார் என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. DSP க்கும் ஆய்வாளருக்கும் வித்யாசம் தெரியாது. DSP விசாரணையில் நான் நடந்த விபரங்களைச் சொன்னேன். DSP விசாரணையில், எதிரி என்னைக் கம்பியை வைத்து முதுகில் அடித்துவிட்டதாக தவறுதலாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உமாராணி ஆஜர் எதிரிக்கு சின்னம்மா (எதிரியின் அப்பாவிற்கு உடன்பிறந்த தம்பி மனைவி) என்றால் சரிதான். அவரது சித்தப்பா சொல்லித்தான் அந்த இடங்களை அனைத்தும் எதிரி பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த இடம் தரிசு இடம் என்றால் சரியல்ல. நான் வரும்போது சண்டையும் தெரியாது. தரிசாகவும் இல்லை. உமாராணியிடம் நடந்த சங்கதிகளை உடனே போன் போட்டு சொன்னேன். அன்று சாயந்திரம் உமாராணி வந்துவிட்டார். உமாராணி தான் என்னை காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். புகார்மனுவில் உமாராணி சாட்சி கையெழுத்து போட்டாரா என்றால்

போட்டிருப்பார் என்று நினைக்கிறேன். எதிரியை இந்த நிலங்களில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்பதற்காக பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றும் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் உமாராணிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நாள், நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியை சிவில் வழக்கு போட்டால் காலதாமதம் ஏற்படும் என்பதால் உமாராணியின் தூண்டுதலின் பேரில் போலிஸ் அதிகாரிகளின் துணையோடு எதிரியை வெளியேற்றுவதற்காக இவ்வாறு புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 413 / 2017** |
| **Deposition of witness for** | **:** | **PW : 2** |
| **Name** | **:** | **திருமதி. பார்வதி** |
| **Father's / Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.11.2023**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் ஆண்டிபட்டியில் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது உடன் பிறந்த அக்கா மகள் ஆவார். ஆஜர் எதிரி எனது மகளின் மச்சான் மகன். எனக்கு பேரன் ஆவார். சுமார் 6 வருடம் முன்பு, குன்னூத்துப்பட்டியில் என் மகள் தோட்டத்தில் இருந்தோம். அசா1 எனக்கு துணைக்கு அங்கு வந்து இருந்தார். அப்போது மதிய 02.00 மணியளவில் அங்கு வந்த ஆஜர் எதிரி, என்ன இங்கு வந்து இருக்க என்று கேட்டார். அதற்கு நான், என் மகள் தோட்டம், என் மருகமன் தோட்டம் என் பிள்ளைக்காக இருக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு எதிரி அய்யாவுத்தேவன் பொண்டாட்டியா என்று கேட்டார். ஏம்ப்பா இப்படி பேசுற என்று கேட்டேன். நான் புருஷன் இல்லாதவ, இப்படி பேசக்கூடாது என்று சொன்னேன். அதற்கு எதிரி அத இத தூக்கி போட்டார். நைட்டு வந்து போர் மோட்டர் இரண்டையும் அறுத்துப்போட்டார். உன் மச்சான் மகன் வந்து இப்படி பேசினார் என்று என் மகளுக்கு போன் செய்து சொன்னேன். அதற்கு அவள் போலிசுக்கு ரிப்போட்

பண்ணுங்க என்று சொன்னாள். உசிலம்பட்டி ஸ்டேசனில் ரிப்போர்ட் பண்ணோம். அவங்க வந்தாங்க- ரிப்போர்ட் எழுதினாங்க. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>**

எதிரி என்னைப் பார்த்து, அய்யாவுத்தேவன் பொண்டாட்டியா என்று கேட்டார் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத் தவிர வேறு விஷயங்கள் எதையும் நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. 7 வருடங்களுக்கு முன்பு என் மருமகன் சந்தானம் இறந்துவிட்டார். அதன் பிறகு தான் நான் என் மகள் வீட்டிற்கு வந்தேன். அதற்கு முன்பு, கருப்புத்தேவன் மகன் போஸ் தான் அந்த தோட்டத்தைப் பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. தோட்டத்து விஷயமாக என் மகள் வேறு கோர்ட்டில் கேஸ் போட்டாரா என்றால் என் மகளுக்காக நாங்க தான் கேஸ் போட்டோம். எதற்காக வழக்கு போட்டோம் என்றால் வழக்கு போட்டது எனக்குத் தெரியாது. என் மகளிடம் தான் கேட்கவேண்டும். நான் ஆண்டிப்பட்டியில் தான் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன். என் மகளுக்காக நான் குன்னூத்துப்பட்டியில் உதவியாக வந்து இருக்கிறேன். சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் இடத்திற்கு நான் வரவில்லை என்றால் சரியல்ல. அசா1, பூங்கொடி ஆகியோரும் சம்பவ இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்றைய தினமே போலிஸ் ஸ்டேசனுக்குப் போனோம். அன்றே எங்களை விசாரித்தார்கள். அன்றைய தினம் மாலை 06.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு போலிசார் வந்து விசாரணை செய்துவிட்டு போனார்கள். அதற்கு முன்பாகவே புகார் அளித்துவிட்டோம். அசா1 புகார் கொடுக்கும்போது என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்களா என்றால் எங்கள் 3 பேரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று

சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தினை எதிரி தான் அனுபவித்து வந்தார் என்றும் எதிரியை வெளியேற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அய்யவுத்தேவர் மகன் தான் கருப்பையாதேவர். அவர் இறந்த பிறகு மதினியும் அவரது மகனும் தான் இடத்தைப் பார்த்துக் கொண்டார்கள். எதிரி அந்த இடத்தைப் பராமரித்து எனக்குத் தெரியாது- அந்த நிலத்தை உழுது விவசாயம் செய்து என் மகளுக்கு குத்தகை செலுத்தி வந்தார்கள் என்றும் குத்தகையை திருப்பிவிட்டு அவரை வெளியே போகச் சொன்னோம் என்றும் அதற்கு அவர் மறுத்ததால், சிவில் வழக்கு தொடர்ந்தால் காலதாமதம் ஏற்படும் என்பதற்காக, எதிரி மீது எனது மகள் உமாராணியின் தூண்டுதலின் பேரில் இந்த பொய்யாக வழக்கு கொடுக்கப்பட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 413 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 3** |
| **Name** | : | **திருமதி. பூங்கொடி** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.11.2023**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் போடியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அசா2 எனது அம்மாவின் உடன் பிறந்த தங்கை எனக்கு சின்னம்மா ஆவார். அசா1 எனது பெரியம்மா மகள் எனக்கு அக்கா ஆவார். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு, என் சின்னம்மா தோட்டத்திற்கு வா என்று துணைக்கு கூப்பிட்டார். நான் போடியில் இருந்து வந்து இருந்தேன். மதியம் சுமார் 02.00 மணிக்கு நான் சாப்பிட்டு வெளியே வந்தேன். எதிரியும் எனது சின்னம்மாவும் சண்டை பிடிச்சுக்கிட்டு இருந்தாங்க. நான் எதற்கு சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு என் கையில் இருந்த தட்டை பிடுங்கி போட்டார். யாருடைய தோட்டம் இது வெளியே போங்க என்று சொன்னார். அசா1 ஐ தள்ளிவிட்டதில் அவர் கீழே விழுந்துவிட்டார். நானும் கீழே விழுந்துவிட்டேன். அதன் பிறகு அசா1 complaint கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :**

தோட்டத்திற்கு சம்பவம் நடந்த அன்று வந்தேனா என்றால் இல்லை. சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே வந்துவிட்டேன். அப்போது தோட்டம் தரிசாகத்தான் இருந்தது. போரில் தண்ணீர் வரவில்லை. போலிசார் அன்றைக்கே மாலை சுமார் 05.00 மணிக்கு என்னை விசாரித்தார்கள். எதிரி அசா1 ஐ அடிக்கவும் இல்லை என்றும் கீழே தள்ளிவிடவும் இல்லை என்றும் உமாராணியின் தூண்டுதலின் பேரில் பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் நான் சம்பவம் நடந்த அன்று அந்த இடத்திலேயே இல்லை என்று சொன்னால் சரியல்ல. உமாராணி அன்று இரவு 09.00 மணிக்கு வந்துவிட்டார். போலிசார் 4,5 முறை வந்து விசாரித்தார்கள். போலிசில் எந்த அதிகாரி என்னை விசாரணை செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் படிக்கவில்லை. போலிசார் தான் என்னை விசாரித்தார்கள்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை